<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 01/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமி | நாள் | 08.01.2024 |
| கணவர் பெயர் | மாணிக்கம் | | |

**<u>6, 7 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

8) 6, 7 பிரதிவாதிகள் இதர பிரதிவாதிகளுக்கு என்ன உறவுமுறை என்றால், 1ம் பிரதிவாதியின் மருமகள் 6ம் பிரதிவாதி ஆவார். 7ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் பேத்தியாவார். 1994ம் வருடம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் அடமான ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அடமான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை.

9) தற்போது தாவா சொத்தில் விவசாயம் செய்கிறோமா என்றால், ஆமாம். வேப்பமரம் வைத்தும், மாட்டு தீவணம் வைத்தும் விவசாயம் செய்கிறோம். நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்தில் நான் ஒரு போதும் விவசாயம் செய்ததில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து காவேரிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், அது அவரது கிரய சொத்து. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி சொத்து காவேரியின் குடும்பத்திற்குள் பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்து என்றாலும், தற்போது வரை மேற்படி சொத்து குடும்ப உறுப்பினர்களுக்குள் பாகம் பிரிக்கப்படாமல் உள்ளது என்றாலும் சரியல்ல.

10) எப்போது 1ம் பிரதிவாதி காவேரி தாவா சொத்தை எனக்கு கிரயம் அளித்தார் என்றால், தேதி சரியாக நினைவில்லை. மேற்படி சொத்தை கிரயம் செய்த போது 2முதல் 7 வரையிலான பிரதிவாதிகளிடம் ஏதேனும் கையெழுத்து பெறப்பட்டதா என்றால், காவேரி மட்டும் தான் போட்டுள்ளார். 6ம் பிரதிவாதி மாரியம்மாளின் கணவர் பெயர் என்னவென்றால், நடராஜன். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை. என் பெயரில் கிரய பத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார்.

11) அவ்வாறு 6ம்பிரதிவாதியின் கணவர் நடராஜனுக்கு மேற்படி தாவா சொத்தில் பாக உரிமை உள்ளபோது அவர் இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசான 6, 7 பிரதிவாதிகளை சேர்த்து கையெழுத்து பெற்றிருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு அவர்களிடம் சம்மதம் பெறாமல், 1ம் பிரதிவாதி மட்டுமே தன்னிச்சையாக அளித்த கிரயம் 6, 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

12) 6, 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்தார்கள் என கூறி நான் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன் என்றால், சரிதான். மேற்படி புகாரின் அடிப்படையில் அவர்கள் மீது குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் 6, 7 பிரதிவாதிகள் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்றால், சரியல்ல. தற்போதும் அந்த வழக்கு நிலுவையிலுள்ளது.

13) 6, 7 பிரதிவாதிகள் என்னையும் தரப்பினராக சேர்த்து இதே நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.247/2012 என்ற பாகபிரிவினை வழக்கு கடந்த 20.01.2015 ம் தேதியில் இந்த 6, 7 பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பாணையில் கண்டுள்ள சொத்துக்களில் இந்த தாவா சொத்தும் உள்ளடங்கியுள்ளது என்றால், சரியல்ல. இவ்வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்பே 6, 7 பிரதிவாதிகள் பாகபிரிவினை கோரி எனக்கெதிராகவும், இதர பிரதிவாதிகளுக்கெதிராகவும் தாக்கல் செய்த மேற்படி வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14) மேற்படி பாகபிரிவிணை வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் படி 6, 7 பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தை பொறுத்து 6, 7 பிரதிவாதிகளுக்குதான் தாவா சொத்தை பொறுத்து உரிமையும், அனுபவமும் உள்ளது என்றால், சரியல்ல.

15) தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுகுடும்ப சொத்து என்பதால், அதனை 1ம்பிரதிவாதி மட்டுமே தனிப்பட்ட முறையில் விற்க இயலாது என்றாலும், அவ்வாறு செய்துள்ள கிரயம் 6, 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல. ஏற்கனவே அ.வ.எண்.247/2012 என்ற பாகபிரிவினை வழக்கில் 6, 7 பிரதிவாதிகளுக்கு தீர்ப்பான சொத்தில் உரிமை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.